Australian Government
Department of Employment and Workplace Relations

# திறன்களை மதிப்பிடுவதற்கான வெள்ளோட்டத் திட்டம்

# இலவசமான வேலைவாய்ப்பு மதிப்பீடுகள்

வெற்றிகரமான திறன்களின் மதிப்பீட்டைக் கொண்டு ஆஸ்திரேலியாவில் வசித்துவரும் புலம்பெயர்ந்தோரால், வேலைவாய்ப்பை மதிப்பிடுவதற்கான வெள்ளோட்டத் திட்டத்தில் (Employability Assessments Pilot) பங்கேற்கக்கூடியதாக இருக்கலாம்.

## என்ன வழங்கப்படுகிறது?

- ✓ ஒரு இலவசமான வேலைவாய்ப்பு மதிப்பீடு
- ✓ ஒரு இலவசமான பயிற்சி அமர்வு
- ✓ உங்கள் வேலைவாய்ப்புத் திறன்களை மேம்படுத்த ஒரு இலவசமான தனிப்பட்ட திட்டம்
- ✓ மானியத்துடன்கூடிய பயிற்சி.

## உங்கள் வேலைவாய்ப்புத் திறன்களை மேம்படுத்துங்கள்

வேலைவாய்ப்புத் திறன்கள் என்பவை, உங்கள் வேலையைச் செய்வதற்கும் மற்றவர்களுடன் நன்றாக இணைந்து வேலை பார்ப்பதற்கும் உதவும் தொழில்நுட்பமற்ற திறன்களாகும்.

உங்கள் வேலையைச் செய்வதற்கான தகுதிகள், அறிவு மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் உங்களிடம் ஏற்கனவே இருக்கலாம்.

நீங்கள் தேர்ந்தெடுத்த துறையில் உங்களுக்கு வேலை கிடைக்கத் தேவையான ஒரு விடயமாக இலவச வேலைவாய்ப்பு மதிப்பீடு இருக்கலாம்.

## மானியத்துடன்கூடிய பயிற்சியைப் பெறவும்

உங்கள் வேலைவாய்ப்புத் திறன்களை மேம்படுத்த உதவக்கூடிய பயிற்சியை உங்கள் மதிப்பீடு கண்டறியக்கூடும்.

ஆஸ்திரேலிய அரசாங்கமானது பயிற்சிக்காக $3,000 வரை உங்களுக்கு வழங்கும். பயிற்சிக்கான செலவில் 10%-ஐ நீங்கள் செலுத்த வேண்டியிருக்கும்.

## பின்வருமாறு இருந்தால் நீங்கள் இதற்குத் தகுதியுடையவராக இருக்கலாம்:

- ✓ ஒரு **தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலில்** வெற்றிகரமான திறன்களின் மதிப்பீட்டு முடிவைப் பெறுதல்.
- ✓ உங்கள் திறன் மட்டத்திற்குக் குறைவாக வேலை செய்துவருதல்.
- ✓ **தகுதிபெறும் ஒரு நிரந்தர விசாவில்** ஆஸ்திரேலியாவில் வசித்துவருதல்.
- ✓ மற்றொரு ஆஸ்திரேலிய அரசாங்கத் திட்டத்திலிருந்து ஆதரவைப் பெறாமல் இருத்தல்.

இது ஒரு வரையறுக்கப்பட்ட வாய்ப்பு என்பதால் விரைவாகச் செயற்படுங்கள் -
**இன்றே விண்ணப்பியுங்கள்!**

உங்கள் மதிப்பீட்டு ஆணையத்திடம் ஒரு விண்ணப்பப் படிவத்தைக் கேட்டுப்பெறுங்கள். உங்களால் இதில் பங்கேற்க முடியுமா என்று அறிய, நீங்கள் பூர்த்திசெய்த படிவத்தை அவர்கள் சரிபார்ப்பார்கள்.

## இப்போதே விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வேலையைப் பெறுங்கள்!

கூடுதல் தகவலுக்கு QR குறியீட்டை ஊடுகதிர்ப்படம் (ஸ்கேன்) எடுக்கவும்